# பெண்களை மையப்படுத்திய நுண்கடன் திட்டங்கள் சமூகத்தில் ஏற்படுத்தியுள்ள ஒழுக்கவியல் பிரச்சினைகள் - மட்டக்களப்பு மாவட்டத்தின் கோறளைப்பற்று தெற்கு பிரதேசசெயலாளர் பிரிவினை அடிப்படையாக கொண்ட ஓர் மெய்யியல் ஆய்வு 2019


பெயர் :- செல்வி.தங்கவேல் சர்மிலி

பதிவு இலக்கம்:- **EU/IS/2013/AC/31**

சுட்டெண்:- **CS – 5181**



LIBRARY
09 OCT 2020
EUSL, SRI LANKA


மெய்யியல் சிறப்புக் கற்கையின் கலைமாணிப் பட்டத்தின் ஒரு பகுதித் தேவையினை நிறைவு செய்யும் பொருட்டு கிழக்குப் பல்கலைக்கழகத்திற்குச் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.


FAC 797
Project Report
Library - EUSL



தத்துவவியல் மற்றும் விழுமியக் கற்கைகள் துறை,

கலை கலாசார பீடம்,

கிழக்குப் பல்கலைக்கழகம்,

இலங்கை.


2019


PROCESSED
MAIN LIBRARY, EUSL

## ஆய்வுச் சுருக்கம்

பண்டமாற்றுப் பொருளாதார முறைமைக்குள் காணப்பட்ட பொருளாதாரச் செயற்பாடுகள், பணப்பரிவர்த்தனை பொருளாதார உருவாக்கத்தின் பின்னர் ஒரு புதிய உத்வேகத்தில் பயணிக்கத் தொடங்கிவிட்டன. இன்றைய காலகட்டத்தில் ஒவ்வொரு சமூகமுமே பலவகையான சமூகப் பிரச்சினைகளுடன் பின்னிப்பிணைந்திருக்கிறது. சமூகத்தில் ஏற்படுகின்ற மாற்றங்கள் முன்னேற்றகரமானதாகவோ அல்லது பின்னடைவானதாகவோ காணப்படுகின்றன. அந்த வகையில் சமூகத்தினது முன்னேற்றத்தினை அடிப்படையாகக் கொண்டு எழுகின்ற மாற்றங்கள் சிலவேளைகளில் பல தாக்க விளைவுகளினை ஏற்படுத்தக்கூடும்.

அந்தவகையில் நலிவுற்ற மக்களது வாழ்க்கைத் தரத்தினை மேம்படுத்துவதற்கு அறிமுகப்படுத்தப்பட்ட திட்டங்களில் சிறுகடன் திட்டம் மிக முக்கியமானதாகும். இவ் முன்னேற்றகரமான சிறுகடன் திட்டமானது இலங்கை, இந்தியா உட்பட பல உலகநாடுகளில் பல்வேறு அரசு மற்றும் அரசுசார்பற்ற நிறுவனங்களின் உதவியுடன் முன்னெடுக்கப் படுகின்றமையினைக் காணலாம். பல முன்னேற்றகரமான குறிக்கோள்களை அடிப்படையாகக் கொண்டு சிறுகடன் கொடுக்கல் வாங்கல்கள் இடம்பெறுகின்றன. இதன்மூலம் நாட்டின் பொருளாதாரத்திலும், சமூகத்திலும் பல சாதகமான விளைவுகள் ஏற்பட்ட போதிலும் மறுபுறம் புல்வேறு பாதகமான விளைவுகளுக்கும் வழிவகுக்கின்றது.

இன்றைய உலகில் அனைத்து பாகங்களிலும் சிறுகடன் நிதி நிறுவனங்களின் ஊடுருவல் தவிர்க்க முடியாத ஒன்றாகக் காணப்படுகின்றது. மக்களின் பொருளாதார ரீதியான அதிகரித்த தேவைகளை நிறைவேற்றும் ஒரு முக்கிய மூலாதாரமாக சிறுகடன் திட்டங்கள் காணப்படுகின்றன. இது குறிப்பாக கிராமப்புறங்களில் பொருளாதார ரீதியாக பின்னடைவு கொண்டோரின் வாழ்க்கைத் தரத்தினை மேம்படுத்துவதுடன் நகர்ப்புறங்களில் வியாபாரத்தில் ஈடுபடுவோருக்கு அவர்களது வியாபாரத்தினை மேம்படுத்திக்கொள்ளவும் இந்த சிறுகடன் திட்டம் ஏற்படுத்தப்பட்டுள்ளது. உலகளாவிய ரீதியல் வளர்ச்சி அடைந்துவரும் நாடுகளில் காணப்படுகின்ற பிரதானமான பிரச்சினைகளில் வறுமை முக்கிய இடம் வகிக்கின்றது. சமகால பொருளாதாரத்தின் வறுமைத் தணிப்பிற்கும் வாழ்வாதார மீள் பெறுகைக்கும் சிறுகடன் கொடுக்கல் வாங்கல்கள் நடைமுறையில் பெரிதும் காணப்படுகின்றன. அந்தவகையில் இன்றைய காலகட்டத்தில் சிறுகடன் பற்றிய அறிவும் அதன் முக்கியத்துவமும் சமகாலத்தின் அவசியமானதொன்றாகக் காணப்படுகின்றது.

வறுமையின் காரணமாக தங்கள் வாழ்க்கைத் தரத்தினை உயர்த்தும் பொருட்டு முன்வைக்கப்படும் முக்கிய திட்டமாக சிறுகடன் பிரதான இடம் வகிக்கின்றது. சிறுகடனை சமூகத்தில் இலகுவான முறையில் பெறுகின்றார்கள். ஆனால் சிறுகடனைப் பெறும் மக்கள் அவைசார்ந்த அறிவு, தெளிவூட்டல் மற்றும் அதனால் ஏற்படக் கூடிய விளைவுகளை அறியாதவர்களாகவும் மக்கள் காணப்படுகின்றனர். அந்தவகையில்

இலங்கையின் கிழக்கு மாகாணத்தின் மட்டக்களப்பு மாவட்டத்தின் வடக்கே உள்ள கோறளைப்பற்று தெற்கு பிரதேச செயலகப் பிரிவிற்கு உட்பட்ட சந்திவெளிக் கிராமத்தில் சிறுகடன் திட்டங்கள் அதிகமாக இடம்பெறுவதன் மூலம் அவற்றால் ஏற்படும் விளைவுகள் தொடர்பாக குறித்த ஆய்வானது இடம்பெறுகின்றது.

கடந்த மூன்று தசாப்த காலமாக வடக்கு மற்றும் கிழக்கு மாகாண மக்கள் பல துன்பங்களையும் இன்னல்களையும் சந்தித்து வந்தனர். மேலும் குறித்த மாகாணங்களில் தான் அதிகளவான சிறுகடன் நிறுவனங்கள் மக்கள் மத்தியில் பிரபல்யமாகிக் கொண்டு வருவதுடன் போட்டி நிலையில் மக்கள் மீது அதிகளவிலான வட்டி முறைகளுடனான கட்டமைப்புக்களும் நிபந்தனைகளும் கொண்டமைந்ததாக காணப்படுகின்றன.

இந்த அடிப்படையில் இவ் ஆய்வானது "பெண்களை மையப்படுத்திய நுண்கடன் திட்டங்கள் சமூகத்தில் ஏற்படுத்தியுள்ள ஒழுக்கவியல் பிரச்சினைககள், மட்டக்களப்பு மாவட்டத்தின் கோறளைப்பற்று பிரதேச செயலாளர் பிரவினை அடிப்படையாக கொண்ட மெய்யியல் ஆய்வு – 2019" எனும் தலைப்பில் மேற்கொள்ளப்பட்டுள்ளது. சிறுகடன் திட்டங்களுக்கு உள்வாங்கப்பட்டுள்ள சந்திவெளிக் கிராம மக்கள் அன்றாடம் சமூக பொருளாதார சிக்கல்களுக்கு முகம் கொடுத்து வருவதனை அவதானிக்க முடிகின்றது. அந்தவகையில் குறித்த பிரச்சினைகளை இனங்காணும் நோக்கிலும் அதன் தீர்வுகளை முன்வைக்கும் நோக்கிலும் இவ் ஆய்வு அமைகின்றது.

இவ் ஆய்வானது ஐந்து அத்தியாயங்களை உள்ளடக்கியதாகும். முதலாவது அத்தியாயத்தில் ஆய்வு தொடர்பான விடயங்கள் கூறப்பட்டுள்ளன. அதாவது ஆய்வு என்றால் என்ன என்பதனை விளங்கிக் கொள்வதற்கு இவ் அத்தியாயம் துணைபுரிகின்றது. ஆய்வுப் பிரச்சினை, ஆய்வின் நோக்கம், ஆய்வுக் கருதுகோள், ஆய்வுக் கோட்பாடு, ஆய்வு முறையியல், தரவு சேகரிக்கும் முறைகள், மாதிரித் தெரிவு போன்ற விடயங்களை உள்ளடக்கியதாகக் காணப்படுகின்றது. மேற்கொள்ளப்போகும் ஆய்வு தொடர்பான அறிவினைப் பெறுவதற்கு இவ் அத்தியாயம் உதவுகின்றது.

ஆய்வறிக்கையின் இரண்டாவது அத்தியாயமானது இலக்கிய மீளாய்வு ஆகும். இவ் ஆய்வுடன் தொடர்புடைய ஏற்கனவே வெளிவந்த புத்தகங்கள், இலக்கியங்கள், சஞ்சிகைகள், பத்திரிகைகள் போன்றவற்றினை ஆய்வுடன் தொடர்புபடுத்தி மீளாய்வு செய்வதனைக் குறிக்கும். இலக்கிய மீளாய்வின் மூலம் தான் ஏற்கனவே மேற்கொள்ளப்பட்ட ஆய்வுகளினை அறிந்து கொள்வதுடன், ஏற்கனவே செய்யப்பட்ட ஆய்வுகளில் விடுபட்ட விடயங்களினை ஆய்வு செய்ய வழிவகுக்கின்றது.

இவ் மூன்றாவது அத்தியாயமானது இவ் ஆய்வினுடைய ஆய்வுப் முறையியலைப் பற்றி பேசுகிறது. சந்திவெளி கிராமத்தினைப் பற்றிய அறிமுகத்தினைத் தருகின்றது. ஆய்வுப் பிரதேசத்தின் மக்கள் தொகை தொடர்பான விடயங்களினை உள்ளடக்கியதாகக் காணப்படுகின்றது.

தரவுப் பகுப்பாய்வும் கலந்துரையாடலும் என்ற நான்காவது அத்தியாயமானது ஆய்வுப் பிரச்சினைக்கான மாதிரிகளாகத் தெரிவு செய்யப்பட்டவர்களிடம் இருந்து பெறப்பட்ட தரவுகளினை பகுப்பாய்விற்குட்படுத்தி பிரச்சினைகளினை இனங்காண்பதாகும்.

அத்தியாயம் ஐந்தானது ஆய்வின் பகுப்பாய்வு மூலம் பெறப்பட்ட பிரச்சினைகளினைக் கூறுவதுடன் அப்பிரச்சினைக்கு ஆய்வாளனால் முன்வைக்கப்படும் தீர்வாலோசனைகளையும், இவ் ஆய்வு தொடர்பான முடிவினையும் கொண்டிருக்கும். எனவே ஆய்வுச் செயற்பாட்டில் முக்கியமானதாக விளங்கும் ஆய்வுச் சுருக்கமானது ஆய்வறிக்கை தொடர்பாக முழுமையாக விளங்கிக் கொள்ள உதவுகின்றது.

# பொருளடக்கம்


DECLARATION I

உறுதியுரை II

முன்னுரை III

நன்றியுரை IV

ஆய்வுச் சுருக்கம் V

பொருளடக்கம் IX -XII

**அத்தியாயம் ஒன்று - ஆய்வுத்திட்ட முன்மொழிவு**

1.1 ஆய்வு தலைப்பு 01

1.2 ஆய்வு அறிமுகம் 01

1.3 ஆய்வு நோக்கம் 03

1.4 ஆய்வு பிரச்சினை 04

1.5 ஆய்வு கருதுகோள் 05

1.6 ஆய்வு வினா 05

1.7 ஆய்வு முறைமையியல் 06

1.7.1 முதலாம் நிலைத் தரவுகள் 06

1.7.2 இரண்டாம் நிலைத் தரவுகள். 07

1.8 ஆய்வின் முக்கியத்துவம். 07

1.9 ஆய்வு வரையறை 07

1.10 இலக்கிய மீளாய்வு 07-09

1.11 ஆய்வு ஒழுங்கு 09-10

**அத்தியாயம் இரண்டு - இலக்கிய மீளாய்வு**

2.1 அறிமுகம் 11

2.2 மெய்யியல் பற்றிய அறிமுகம் 12

2.3 ஒழுக்கவியல் பற்றிய அறிமுகம் 12

2.4 ஒழுக்கவியலின் பிரதான பிரிவுகள் 13-14

2.5 நுண்கடன் பற்றிய அறிமுகம் 14-15

2.6 எண்ணக்கருவாக்கம் 16

2.6.1 நுண்கடன் பற்றிய அடிப்படை அறிவு 16

2.6.2 வாழ்வாதாரம் 16

2.6.3 குடும்ப நிலை 17

2.6.4 பிள்ளைகளது கல்வி நிலை 17

2.6.5 குடும்ப இடைத்தொடர்பு 17

2.6.6 சமூக மாற்றம் 18

2.7 முன்னைய ஆய்வுகளின் இலக்கிய மீளாய்வு 18-22

**அத்தியாயம் மூன்று - ஆய்வு முறையியல்**

3.1 அறிமுகம் 23

3.2 ஆய்வின் பொது நோக்கமும் சிறப்பு நோக்கமும் 23

3.3 ஆய்வு பிரதேசம் 24

3.4 மாதிரி தெரிவு முறை 25

3.5 ஆய்வுக் கருவிகள் 25

3.5.1வினாக்கொத்து 27

3.5.2 நேர்காணல் 28

3.5.3 ஆவணச் சான்றுகள் 28

3.5.4மைய குழு கலந்துரையாடல் 28

3.6 ஆய்வுக் கருவிகளின் நம்பகம் தகுதியும். 29

3.7 தரவுகளின் பகுப்பாய்வு 30-32

3.8 சாராம்சம் 32

## அத்தியாயம் நான்கு - தரவு பகுப்பாய்வும் கலந்துரையாடலும்


4.1 அறிமுகம் 33

4.2 தனிப்பட்ட தகவல்கள் 33

4.2.1 வயதின் அடிப்படையில் ஆய்வுக்குட்படுத்தப்பட்டோர் பற்றிய விபரம் 33

4.2.2 மாத வருமானம் 33

4.2.3 கல்விநிலை 34

4.2.4 திருமண நிலை 36

4.2.5 நுண்கடன் பெற்றுக் கொண்ட நிறுவனங்கள் பற்றிய விபரம் 36

4.2.6 ஒன்றுக்கு மேற்பட்ட தடவைகள் நுண்கடன் பெற்றுக்கொண்டவர்கள் விபரம் 36-37

4.2.7 நுண்கடனை மீள்செலுத்தும் முறைகள் 38-39

4.3 ஆய்வுத்தகவல்கள் 39

4.3.1 நுண்கடன் பற்றிய அடிப்படை அறிவு 40-43

4.3.2 வாழ்வாதாரம் 43-47

4.3.3 குடும்ப நிலை 48-52

4.3.4 பிள்ளைகளது கல்வி நிலை 52-56

4.3.4. குடும்ப இடைத்தொடர்பு 57-60

4.3.6 சமூக மாற்றம் 61-65

4.4 மூன்று வருட காலங்களில் நுண்கடன் பெற்றுக் கொண்டவர்களது விபரம். 65

4.5 நுண்கடன் பெற்றதற்கான காரணங்கள் 65-66

4.6 நுண்கடன்களினை மீள செலுத்துவதில் ஏற்படும் இடர்பாடுகள். 67-68


## அத்தியாயம் ஐந்து – முடிவுரையும் பரிந்துரைகளும்


5.1அறிமுகம் 69

5.2 ஆய்வுக் கருதுகோள் பரிசீலனை 71

5.3 முடிவுரை 71-72

5.4 பரிந்துரைகள் 73-75

**உசாத்துணைகள்** 76-79

**பின்னிணைப்புகள்**

SPSS வெளியீடுகள் 80-97

வினாக்கொத்து 98-103